**சார்பு நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திருமதி S.** மும்தாஜ், **B.Sc.,B.L.,**

சார்பு நீதிபதி, சீர்காழி

*******

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28–ம் நாள் வியாழக்கிழமை

**EA.No. 1/2024 and 2/2024 and 3/2024 in EP.No.20/2023 in OS. No.66/2020**

1, ரமேஷ்
2. சாந்தி ...மனுதாரர்கள்/ எதிர்மனுதாரர்கள் /எதிர்வாதிகள்

....எதிர்.....

இல்லற ஜோதி ....... எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தின் முன்பாக 15.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ்.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. இ. செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு கேட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கண்டுள்ள காரணங்களுக்காக கடந்த 11.09.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கறவு செய்ய வேண்டியும், இம்மனு தாக்கல் செய்ய 116 நாட்கள் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க வேண்டியும், மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட வாரண்டை நிறுத்தி வைக்க உத்தரவிட வேண்டியும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21, விதி 106(3) மற்றும் பிரிவு 151 ன் படி இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்கள் நிறைவேற்று மனுவில் எதிர்மனுதாரர்கள் என்றும், 1ம் மனுதாரர் பெயரிலும், 2ம் மனுதாரரை முதல் மனுதாரரின் மனைவி என்று தவறாக குறிப்பிட்டு நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு, அதில் மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்பதை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு எதிர்மனுதாரர்கள், மனுதாரர்களின் பொருட்களை ஜப்தி செய்ய உத்தரவு வாங்கியுள்ளதாகவும், தற்போது தான் சட்ட ஆலோசனை கிடைக்கப்பட்டுள்ளதால், மனுதாரர்களுக்கெதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி உத்தரவை ரத்து செய்ய கோரியும், மேற்படி உத்தரவை நிறுத்தி வைக்க கோரியும், இம்மனுக்கள் தாக்கல்

MUMTAJ Digitally signed by MUMTAJ
Date: 2025.08.28 17:20:38 +0530

செய்யப்பட்டுள்ளது. இதற்கு எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் போதிய காரணமின்றி தாக்கல் செய்துள்ள இம்மனுக்களை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார். வழக்கு ஆவணங்களின் பரிசீலனையில் அசல் வழக்கு எண்.66/2020ல் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நிறைவேற்றக் கோரி இம்மனுவை எதிர்மனுதாரர்/மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். நிறைவேற்று மனுவை தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்க மனுதாரர்களுக்கு நீதியின் நலன் கருதி ஒரு வாய்ப்பு அளிக்கலாம் என தீர்மானித்து இம்மனுக்களின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

3. **முடிவாக,** மனுதாரர்கள் செலவுத் தொகையாக தலா ரூ.500/-யை எதிர்மனுதாரருக்கு 15.09.2025ம் தேதிக்குள் கொடுக்க வேண்டுமென்றும், நிறைவேற்று மனுவின் எதிருரையை தாக்கல் செய்ய வேண்டுமென்ற நிபந்தனையுடன் இம்மனுக்கள் அனுமதிக்கப்படுகிறது.

(அழைக்க 16.09.2025)

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ம் நாள் என்கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2025.08.28 17:20:45 +0530

சார்பு நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் -இல்லை-
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் -இல்லை-

சார்பு நீதிபதி, சீர்காழி.

நேரிய / வரைவு உத்தரவு
EA. No. 1/2024 and
EA.No.2/2024 and EA.No.3/2024
EP. No. 20/2023 in OS.No.66/2020
நாள் - 28.08.2025